அகதா க்றிஸ்டி

தமிழில்:K.V.கணேஷ்



# பிறகு அங்கே ஒருவர்கூட இல்லை!

(சிப்பாய்த் தீவு மர்மம்!!)

COMICS PDF TIMES

# அகதா கிறிஸ்டி



COMICS PDF TIMES

தமிழாக்கம் :திரு K.V. கணேஷ்
உருவாக்கம்:திரு பால கணேஷ்
திரு இளங்கோ
ஒருங்கிணைப்பு:சுரேஷ் சந்த்

ரசிகர்களுக்காக ரசிகர்கள் மொழி பெயர்த்து தனிப்பட்ட முறையில் பரிமாற்றம் செய்யப்படும் ஒன்றே தவிர இது விற்பனைக்கல்ல. இதன் மூலம் எவ்வித வணிக லாப நோக்கமும் கிடையாது. இந்த மொழி பெயர்ப்பை சுய தேவைக்காக வணிக முயற்சிகளில் ஈடுபடுத்துபவர்களுக்கும் இதன் மூல படைப்பாளிகளுக்கும், இதை தமிழில் மொழி பெயர்த்தவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இதன் மூல படைப்பாளிகளை ஊக்குவித்து மேலும் படைப்புகளை படைக்கவும், இந்த தமிழ் மொழி பெயர்ப்பு முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிக்க நினைத்தாலும் இதை புத்தகமாக வாங்குவதே அவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு. மேலும் இந்த புத்தகமானது முறையான உரிமம் பெற்று தமிழிலும் புத்தகமாக வரும் வேளையில் அதனை வாங்கி பதிப்பாளர்களுக்கு உங்கள் ஆதரவை நல்கிடுங்கள்.

COMICS PDF TIMES

அகதா கிறிஸ்டியின்



# பிறகு அங்கே ஒருவர் கூட இல்லை



COMICS PDF TIMES


நீண்டநாள் எதிர்பார்த்த உதவி யாளர் வேலை இந்த வெயில் காலத்தில் அழகான தீவில் வேலை கிடைத்திருக்கிறது. என்னை வேலைக்கு எடுத்த நான்சி ஓவன் எப்படி இருப்பாள்? சிப்பாய் தீவு எப்படி இருக்கும்?
ஆளைப் பார்த்தால் உலகம் சுற்றும் வாலிபன் போல் இருக்கிறான்.
அழகாக இருக்கிறாள்! ஒருவேளை பள்ளி ஆசிரியையோ? அவளுடன் பேச வேண்டும் போலிருக்கிறது.
ஃபிலிப் லொம்பார்ட்.
என்ன செய்கிறேன் நான்.? வந்த வேலையை கவனிக்காமல்? ஒரு வாரம் ஜாலியாக தீவில் பொழுதைக் கழிப்பது ஒரு வேலை. அதுவும் பணத் தோடு..! ஆச்சரியம் தான்! சிப்பாய் தீவில் சந்தோஷமாக இருக்கலாம்.
சுட்டெரிக்கும் ரயில் பயணம் மணிக்கணக்காக நீண்டு கொண்டிருக்கிறது.
அமைதி! இன்னும் கொஞ்ச தூரம் தான். நீங்கள் விடுமுறையைக் கழிக்க ஸ்டிக்கிள்ஹெவன் போகிறீர்களா?
ஆமாம் அங்குள்ள சிப்பாய் தீவுக்கு. என் நண்பருக்கு அங்கே ஒரு ஆடம்பர மாளிகை இருக்கிறது.
கேட்கவே சந்தோஷமாக இருக்கிறது.
எமிலி ப்ரெண்ட்
ஜெனரல் மெக்ஆர்தர்
சீக்கிரம் வா தம்பி. ஒக்பிரிட்ஜ் செல்லும் ரயிலை தவற விடக்கூடாது.


டாக்டர் ஆம்ஸ்டிராங்
நாசமாய்ப் போகிற சின்னப் பயல் வரும் வேகத்தில் மோதி விடப் போகிறான்.
நல்லவேளை... அந்தக் கட்டை வண்டியைத் தாண்டி விட்டேன்.
டோனி மார்ஸ்டன்.
நீங்கள்தான் டேவிசா? சிப்பாய் தீவுக்குப் போகக் காத்திருப்பவரா.?
வில்லியம் ப்ளோர்
ஆமாம்! கடற்பறவைகள் நிறைந்த அழகிய தீவு. சிறு வயதில் இங்கே வந்திருக் கிறேன். ஆனால் இப்போது அறிமுகமில்லாத 7 நபர்களுடன் விருந்தாளியாக அழைக்கப்பட் டுள்ளேன். போகலாம், வா.
3


சிப்பாய் தீவுக்குச் செல்லும் பயணிகள் வந்து இருக்கிறீர்களா?
அப்படியானால் மிஸ் கிளாதோர்ன், நீங்கள் திருமதி ஓவனின் உதவி யாளராக வேலை செய்ய வந்து இருக்கிறீர்கள்.?
சரியாகச் சொன் னீர்கள் மிஸ்டர்...?
லொம்பார்ட் ஃபிலிப்லொம்பார்ட்.
இதற்கு முன் கார்ன்வால் மற்றும் டார்க்கி போய் இருக்கிறேன் ஆனால் இந்த தீவுக்கு வருவது இதுவே முதல் முறை. இது என் அதிர்ஷ்டம்தான்! மீண்டும் லண்டன் திரும்புவது மகிழ்ச்சியாக இருக்காது.
டாக்ஸியில் ஏறும் அந்த முதிர்பெண்ணைக் கவனித்தாயா..? பார்க்க நம்மை விருந்துக்கு அழைத்தவளைப் போலவே இருக்கிறது.
அதோ அந்த பெரிய மீசை வைத்த மனிதர் நிச்சயம் ஒரு ராணுவ அதிகாரியாகத் தான் இருக்க வேண்டும்.
அவரை எனக்கு தெரியும். நான் நினைப்பது சரியாக இருந்தால் அவர்தான் ஜெனரல் மெக்ஆர்தர். போரில் பல சாகசம் செய்தவர்.
கடல் இன்று அமைதி யாக இருக்கிறது.
நல்லதுதான்! எனக்கு கடல் பயணம் ஒத்துக்கொள்ளாது.
4


லேடீஸ் அண்ட் ஜெண்டில் மேன்!
சிப்பாய் தீவு வந்துவிட்டது.
நல்வரவு லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்! என் பெயர் ரோஜர்ஸ் இது என் மனைவி.
உங்களை வரவழைத்த ஓவன் மற்றும் அவர் மனைவி தவிர்க்க முடியாத தாமதத்தால் நாளை வருவார்கள். அவரவர் அறைக்கு சென்று ஓய்வு எடுக்கலாம். 8 மணிக்கு இரவு உணவு தயாராக இருக்கும்.
5


இந்த அறை உங்களுக்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன் மிஸ்?
நன்றி! நான் திருமதி ஓவனின் புதிய உதவி யாளர். உங்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன்.
இல்லை மிஸ், எனக்கு எதுவும் தெரியாது. திருமதி ஓவனையும் நான் பார்த்த தில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு தான் நாங்களும் வந்தோம்.
இங்கு எத்தனை வேலையாட்கள் இருக்கிறார்கள்?
நானும் என் கணவரும் மட்டும்தான்! தேவையென்றால் மணியை அடியுங்கள் மிஸ்.
என்னவொரு வித்தி யாசமான பெண்மணி!
Six little soldier boys going out to sea.
Five little soldier boys walking in the zoo. A big bear
Three little soldier boys sitting in the sun. One got frizzled up and then
Two little soldier boy left all alone. He went and hanged himself
One little soldier boy
And then there were None.
there were Seven.
halves and then there were Six.
then there were Five.
there were Four.
and then there were Three.
then there were Two.
there was One.
பத்து குட்டி சிப்பாய்கள் விருந்துண்ணப் போனார்கள். ஒருவன் தொண்டையில் உணவு அடைத்துக்கொள்ள, மிஞ்சியவர் 9.
ஒன்பது குட்டி சிப்பாய்கள் விடிய விடிய கதைபேச, ஒருவன் மட்டும் மீளாத்துயிலில் உறங்க எஞ்சினர் 8.
எட்டு குட்டி சிப்பாய்கள் கடற்கரையில் பயணம் செய்தனர். ஒருவன் அங்கேயே தங்கிவிட, அஞ்சினர் 7.
ஏழு குட்டி சிப்பாய்கள் கட்டைகளை வெட்டும்போது ஒருவன் தன்னையே வெட்டிக் கொண்டான். மிஞ்சியது 6.
ஆறு குட்டி சிப்பாய்கள் தேன் கூட்டைக் கலைத்து விளையாட, ஒருவனை குண்டு தேனி கொட்டியது. எஞ்சியது ஐந்து.
5 குட்டி சிப்பாய்கள் சட்டம் படிக்க போனார்கள். ஒருவன் புத்தக கிடங்கில் சிக்க மிஞ்சியது 4.
நான்கு குட்டி சிப்பாய்கள் கடலில் விளையாடப் போனார்கள். சிவப்பு மீன் ஒருவனை விழுங்கிவிட, மிஞ்சியவர் மூவர்.
மூன்று குட்டி சிப்பாய்கள் மிருகக்காட்சி சாலைக்குப் போனார்கள். கரடி ஒருவனை கட்டி இழுக்க, எஞ்சியவர் இருவர்.
இரண்டு குட்டி சிப்பாய்கள் சூரிய ஒளியில் படுத்திருக்க, ஒருவன் மட்டும் உருகிப் போனான். மிஞ்சியவன் ஒருவன்.
ஒரே ஒரு குட்டி சிப்பாய் மட்டும் தனித்திருக்க, பின் ஓடிப்போய் தொங்கினான் தூக்கிலே.
பிறகு... அங்கு ஒருவர் கூட இல்லை..!
6


இந்த சிப்பாய் பொம்மைகளை பார்க்கவே விசித்திரமாக இருக்கிறது அப்படித்தானே?
குட்டி சிப்பாய்கள்! சிப்பாய் தீவு என்ற பெயர் வர இதுதான் காரணமோ?
என்ன ஒரு விசித்திர ஒற்றுமை! என் அறையில் உள்ள கவிதையில் சொன்ன பத்து குட்டி சிப்பாய்களை இது நினைவுபடுத்துகிறது.
என் அறையிலும்!
என்னுடைய அறையிலும்!!
எல்லோர் அறையிலும் ஒரே போல் கவிதையா? ஆச்சரியமாக இருக்கிறதே?
என்னைக் கேட்டால் இது சிறு பிள்ளைத்தனம்!
யாருக்காவது ஏதாவது தோன்றுகிறதா? இந்த வீட்டினுள் நாம் 10 விருந்தாளிகள் இங்கே இருப்பதும் பத்து குட்டி சிப்பாய்கள்.
என்ன ஒரு விசித்திரம்?
7.


லேடீஸ் அண்ட் ஜெண்டில்மேன் தயவுசெய்து அமைதியாக இருங்கள்.
பின்வரும் குற்றங்கள் உங்கள் மீது சுமத்தப்படுகிறது .
எட்வர்டு ஜார்ஜ் ஆம்ஸ்டிராங்.14 மார்ச் 1925ல் லூசியா மேரியின் மரணத்திற்கு காரணமானீர்கள்.
வில்லியம் ஹென்றி ப்ளோர்.
10 அக்டோபர் 1928 இல் ஜேம்ஸ் ஸ்டீபனுக்கு மரணத்தை கொடுத்தீர்கள்.
லெப்டினன்ட் பிலிப் லொம்பார்ட்.
பிப்ரவரி 1932இல் 21 ஆப்பிரிக்கப் பழங்குடியினர் மரணத்திற்கு காரணம்.
ஆண்டனி ஜேம்ஸ் மார்ஸ்டன். கடந்த வருடம் நவம்பர் 14 இல் ஜான் மற்றும் லூசியை கொன்றாய்.
லாரன்ஸ் ஜான் வார்கிரேவ்.
10 ஜூன் 1930 இல் எட்வர்ட் செடானை சாகடித்தாய்.
ஜான் கோர்டன் மேக் ஆர்தர் .
4 ஜனவரி 1917ல் உங்கள் மனைவியின் காதலன் ஆர்தர் ரிச்மாண்டை சாவுக்கு தள்ளினீர்கள்.
தாமஸ் ரோஜர் மற்றும் மனைவி ஈதல். 6 மே 1929இல் ஜெனிபர் பிராடியை சாக விட்டீர்கள்.
வெரா எலிசபெத் கிளேதோர்ன்.
11ஆகஸ்ட் 1935இல் சிரில் ஹாமில்டனை கொன்றாய்.
எமிலி கரோலின் பிரென்ட்! 5 நவம்பர் 1931இல் பாட்ரைஸ் டெய்லரின் மரணத்திற்கு நீயே காரணம்.
நீதியின் முன் நிற்கும் குற்றவாளிகளே...
உங்கள் தரப்பு விளக்கம் எதுவும் இருக்கிறதா?
8



பயப்பட ஒன்றுமில்லை. மயங்கிவிட்டாள்.
பேசியது யார்? எங்கிருந்து பேசினார்?
என்ன நடக்கிறது இங்கே? எல்லோரையும் வரவழைத்துக் கேலி செய்கிறார்களா?
அந்தக் குரல் நமக்கு மிக அருகில் பேசியது போல் கேட்டது.
இதோ ஒரு கிராமபோன்.
இதை பார்த்தால் உண்மையில் யாரோ கேலி செய்வது போலுள்ளது.
யார் என்று பார்க்க வேண்டும்.
அது எப்படி பொய்யான குற்றச்சாட்டை சொல்லமுடியும்?
அந்த கிராம போனை இயக்கியது யார்?
நான்தான் சார். மிஸ்டர் ஓவனின் உத்தரவுப்படி செய்தேன். அது இசைத் தட்டு என்று நினைத்தேன். உண்மையில் என்னவென்று தெரிந்திருந்தால்...?
அதில் ஏதாவது தலைப்பு இருக்கிறதா?
இருக்கிறது. அன்னத்தின் பாடல் என்று.
9


இந்த மொத்த விவகாரமும் அறிவு கெட்டதனம்! அந்த ஓவன் யாராக இருந்தாலும்...
அதேதான் . யார் அந்த ஓவன்?
அதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ரோஜர்ஸ், உன் மனைவியை அறைக்குக் கூட்டிச் செல். அவளுக்கு ஓய்வு தேவை.
நான் உதவி செய்கிறேன். கொஞ்சம் பிராந்தி கொடுத்தால் நினைவு வந்துவிடும்.
உன்னை பற்றி தெரியாது. இருந்தாலும் நாம் அனைவரும் மதுவருந்தலாம்.
அந்தக் குரல் நம் அனைவரின் பெயரையும் சொல்லி அழைத்தது அதில் வில்லியம் ஹென்றி ப்ளோர் என்ற பெயரும் இருந்தது டேவிசின் பெயர் குறிப்பிடபடவில்லை இதைப் பற்றி நீ என்ன சொல்கிறாய் டேவிஸ்?
உண்மையை சொல்கிறேன். என் பெயர் டேவிஸ் இல்லை. நான் வில்லியம் ப்ளோர். டேவிஸ் என்ற பெயரில் என்னை இங்கே வரச்சொன்னது மிஸ்டர் ஓவன்தான் . அவர் மனைவியின் நகைகளை பாது காக்கவே இங்கே வந்திருக்கிறேன்.
உண்மையில் ஓவன் ஒரு தந்திரசாலி.
இப்போது உண்மையை கண்டுபிடிக்க வேண்டும். ரோஜர்ஸ், யார் இந்த ஓவன்? பதில் சொல்!
எனக்குத் தெரியாது! இதுவரை நான் அவரை பார்த்ததும் இல்லை. நானும் என் மனைவியும் ஒரு ஏஜென்சி மூலம் வேலைக்கு அமர்த்தப்பட்டோம். விருந்தினர் வரும் முன் வீட்டை எப்படி தயார் செய்ய வேண்டும் என்று குறிப்புகளும் இருந்தது.
ரிச் ஹோட்டல் பேப்பரில் டைப் செய்யப்பட்டுள்ளது கீழே உலிக் நார்மன் ஓவன் என்ற கையெழுத்துடன்.
விசித்திரம்! நான் உனா நான்சி ஓவன் என்று நினைத்தேன்.!
நீங்கள் சொல்வது சரிதான் மிஸ் கிளேதோர்ன்! நம்மை அழைத்தவன் ஒரு அனாமதேயன். அடையாளம் தெரியாத பைத்தியக்காரன்.
நமக்குள் ஒரு விசாரணையை நாம் தொடங்கலாம். இந்த தீவுக்கு வரச் சொல்லி என் முன்னாள் தோழியிடம் இருந்து அழைப்பு வந்தது. அதே போல் உங்கள் அனைவருக்கும் நண்பர், உறவினர் பெயரில் அழைப்பு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்! நம்மை பற்றிய அனைத்து விபரமும் நம்மை அழைத்தவருக்கு தெரியும். அவர் சொன்ன பயங்கர குற்றச்சாட்டுகளே உதாரணம்.
அபத்தமான, இட்டுக் கட்டியபொய்
இது மிகவும் மோசமானது.
COMICS PDF TIMES
10.


எட்வர்டு செடானை மரணத்திற்கு அனுப்பியதாக என் மீது குற்றச்சாட்டு! அந்த வழக்கு விசாரணையின் போது அவனது வக்கீல்கள் வாதம் பலமாக இருந்தது. பிறகு நான் அவன்தான் கொலைகாரன் என்று ஜூரிகளை ஏற்கச் செய்தேன். அவனுக்கு தூக்கு தண்டனை கிடைத்தது. நான் என் கடமையைத்தான் செய்தேன்!
சிரில் ஹாமில்டன் என்ற சிறுவனை கவனித்துக்கொள்ளும் பொறுப்பில் இருந்தேன்.அவனுக்கு கடலில் வெகுதூரம் நீந்த வேண்டும் என்ற ஆசை நான் அனுமதி கொடுக்கவில்லை. ஒருநாள் என்னை ஏமாற்றி கடலுக்குள் சென்றவனை காப்பாற்ற முடியவில்லை. மூழ்கி இறந்து விட்டான். அது என் தவறல்ல. அவனது தாயார் என் மீது குற்றம் சுமத்தவில்லை. என் மீதான குற்றச்சாட்டு மோசமானது.
என் மீதான குற்றச்சாட்டும் தவறானது. என் படையில் ஆர்தர் ரிச்மாண்ட் ஒரு அதிகாரி. எதிரிகளை உளவு பார்க்கும் போது கொல்லப் பட்டான். போரில் இது போன்று நடப்பது சகஜம். அவன் என் மனைவியின் முன்னாள் காதலன் என்பதால் கறை என் மீது படிந்தது!
அது உண்மையில் நடந்த கதை தான். அடர்ந்த காட்டுக்குள் நாங்கள் மாட்டிக் கொண்டபோது உணவு பையுடன் நான் மட்டும் தப்பி விட்டேன். உயிர் வாழ வேறு வழி இல்லை என்னும் போது என்னை காப்பாற்றிக் கொள்ளவே அப்படி செய்தேன்!
என் காரில் மோதி பலியான ஜான் மற்றும் லூசியை நினைத்து க்கொண்டேன். அது ஒரு விபத்து. இப்போதைய கார்கள் வேகத்திற்கு முக்கியத்துவம் தருகின்றன, சாலைகளும் மோசம்!
நானும் என் மனைவியும் மிஸ் பிராடியிடம் வேலை செய்தோம். ஒரு நாள் அவளுக்கு உடல் நல மில்லை. அன்று இரவு புயலுடன் பெருமழை. போன் வேலை செய்ய் வில்லை. நான் நடந்து சென்று டாக்டரை கூட்டி வந்தேன். காலம் கடந்து விட்டது. அவளை காப் பாற்ற இயன்றவரை முயன்றேன்.
அதனால்தான் தன் உயிலில் ஒரு பெரும் தொகையை உனக்கு எழுதி வைத்தாளோ.?
அப்போது நான் ஒரு போலீஸ் அதிகாரி. வங்கிக் கொள்ளை வழக்கை விசாரித் தேன். லேண்டர் காவலாளியை கொன்று கொள்ளை அடித்தான். சிறை சென்ற ஒரே வருடத் தில் இறந்தான். நான் என் கடமையைத்தான் செய்தேன்.
எனக்கே புதிராக இருக்கிறது. க்ளீஸ் என்ற யாரையும் எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு வேளை என் பேஷன்ட் ஆக இருக்கலாம். எல்லா ஆபரேஷனும் வெற்றி அடைவது இல்லையே!
நான் எப்போதும் என் மனசாட்சி யின் படி நடப் பவள். என்னை யாரும் குற்றம் சொல்ல முடியாது!
அதிசயம்! இங்கே என்னை தவிர எல்லோரும் சட்டத்தை மதித்து நடப்பவர்கள்!
நம்மைப் பற்றிய விசாரணை இத்துடன் முடிகிறது! ரோஜர்ஸ், இந்த தீவில் வேறு யாரும் இருக்கிறார்களா?
இல்லை சார்! யாருமே இல்லை.
நம் அனைவரையும் எதற்காக இங்கே வரவ ழைத்தான் அந்த பைத்தியக் காரன்? உடனே இந்த தீவை விட்டு போய்விடலாம்.


மன்னிக்கவும் சார்! அது நடக்காது. இந்த தீவில் ஒரு படகும் இல்லை. தினமும் காலை உணவு கொண்டு வரும் கப்பலும் உடனே திரும்பிவிடும்.
அப்படியானால் நாளைக் காலை படகு வந்ததும் நாம் கிளம்பலாம்.
நாம் உடனே கிளம்ப கூடாது. இந்த மர்மத்தை கண்டுபிடிக்க வேண்டும். திகிலூட்டும் துப்பறியும் கதை போல் உள்ளது.
அடக்கடவுளே! மார்ஸ்டன் இறந்து விட்டான்!!
உடனடி மரணம்! சயனைடு விஷமோ?
விஸ்கியும் சோடாவும் கெட்டவாடை வரவில்லை! ஒருவேளை அவனே கிளாஸில் விஷத்தை போட்டானோ? யாருக்குத் தெரியும்?
பத்து குட்டி சிப்பாய்கள் விருந்து சாப்பிட போனார்கள். ஒருவன் தொண்டையில் உணவு அடைத்துக்கொள்ள மிஞ்சியவர் 9..!



வினோதமாக இருக்கிறது!
10 குட்டி சிப்பாய்கள் இருந்தது! சத்தியம் செய்வேன்.
நான் உன்னை மிகவும் நேசித்தேன்
ஆர்தர் ரிச்மாண்டை காதலித்து எனக்கு ஏன் துரோகம் செய்தாய்? அவனைக் கொன்றதற்காக நான் வருந்தவில்லை. வெகுநாட்களுக்கு முன் நடந்தது யாருக்குத் தெரிந்திருக்கும்?
மிஸ் பிரண்ட். அவளேதான். என் தலையில் இருந்த ஒருவனின் குடும்ப பெயரும் பிரெண்ட்தான்.
மிஸ் கிளாதோர்ன். நான் அந்தப் பாறை வரை நீந்த விரும்புகிறேன்.
13


வேண்டாம் சிரில். அது வெகு தொலைவு.
உன்னை மிகவும் நேசிக்கிறேன் வெரா. ஆனால் காசில்லாத என்னால் உன்னை கல்யாணம் செய்ய முடியாது சொத்து முழுவதும் என் ஒன்று விட்ட தம்பி சிரிலின் பெயரில் உள்ளது. அந்த சொத்தை விட்டுக்கொடுத்தால்.... நீயும் நானும்... அதுதான் வாழ்க்கை...
ஹியூகோ! இன்று நீ என் அருகில் நெருக்கமாக இருப்பதை போல் உணர்கிறேன்.
அன்று மது அருந்திவிட்டு அந்த அறுவை சிகிச்சை செய்து இருக்கக்கூடாது. அதுவே அந்தப் பெண்ணின் மரணத்திற்கு காரணம். யாரும் கண்டுபிடிக்க தேவையில்லை.
அந்த நர்ஸ் ஏன் என்னை முறைத்துப் பார்க்கிறாள்? ஒருவேளை அவளுக்கு...?
இல்லை, இருக்காது. அவள் எமிலி பிரண்ட் இல்லை.
டாக்டர்? டாக்டர்? எழுந்திருங்கள்!
என்ன விஷயம்?
என் மனைவி....!! அவளை எழுப்ப முடியவில்லை?
என்ன? அவள்..?
ஆமாம்! இறந்து விட்டாள்.
ஒன்பது குட்டி சிப்பாய்கள் விடிய விடிய கதை பேச ஒருவன் மட்டும் மீளாத் துயில் உறங்க எஞ்சினர் 8.
14


எல்லோரும் சாப்பிட்டு முடித்தாயிற்று என்று நினைக்கிறேன். ஒரு வருத்தமான செய்தி! நேற்று இரவு ரோஜர்ஸ்சின் மனைவி இறந்து விட்டாள்.
கடவுளே! என்ன கொடுமை! இங்கே வந்த பிறகு இருவர் இறந்திருக்கின்றனர்.
தெய்வம் நின்று கொல்கிறது. இவளும் இவளது கணவனும் ஒரு வயதான பெண்மணியை கொன்றவர்கள்?
ரோஜர் மனைவியின் மரணத்திற்கு காரணம் எதுவென்று தெரிந்ததா?
மேலோட்டமாக பார்த்துச் சொல்வது கடினம்.
அமைதியை இழந்து காணப்பட்டாள் . அவளது மனசாட்சியை ஏதோ பாதித் திருக்கின்றது.
ஒருவேளை ரோஜர்சும் அவரது மனைவியும் எஜமானியை கொலை செய்து இருந்து, மனைவி வாக்குமூலம் கொடுத்து விடுவாள் என்ற பயத்தில்....!! நான் சொல்வது
படகு வரும் அறிகுறியே தெரியவில்லை?
அது வராது.....
இந்தத் திட்டத்தில் அதுவும் ஒரு பகுதி! இந்த தீவை விட்டு யாரும் உயிருடன் போகப் போவதில்லை. நம் அனைவருக்கும் சமாதி இங்கேதான்.
அடக்கடவுளே!?
என்ன விஷயம்?
15


அந்த சிப்பாய் பொம்மைகள்...
எட்டு பொம்மைகள் இருக்கிறது! இருவர் இறந்துவிட்டனர். இரண்டு பொம்மைகள் குறைகிறது.
அந்தக் கப்பல் வந்து நம்மை கூட்டி செல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.
நேற்று ஆண்கள் மத்தியில் இதை பேச விரும்பவில்லை. ஆனால் குற்றச்சாட்டுகள் சரியாகவே இருந்தது.
பாட்ரீஸ் டெய்லர் என்னிடம் வேலை செய்தவள். ஒழுக்கம் இல்லாதவள் என்று பிறகுதான் தெரிந்தது. திருமணம் ஆகாமல் கர்ப்பமானாள். வேலையை விட்டு நிறுத்தினேன் பின் அவளே ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாள் அதற்கு நான் காரணம் அல்ல அது அவள் செய்த பாவம்.
அப்படியானால் அது உண்மை. நாம் அனைவரும் பாவம் செய்தவர்கள்.
ஆண்டனி மார்ஸ்டன்! திருமதி ரோஜர்ஸ்!! 12 மணி நேரத்தில் இரண்டு தற்கொலைகள்! ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
நீ என்ன நினைக்கிறாய்.?
நான் சொல்ல என்ன இருக்கிறது.? நீதியை நிலைநாட்ட நினைக்கும் யாராலோ இருவரும் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.
நீதி வழங்கவா.?
ஆமாம்! உதாரணம் திருமதி ரோஜர்சின் மரணம். டாக்டர் வரும் முன் அந்த கிழவியை சாகவிட்டு இருக்கலாம். நமக்கு தெரியுமா.? நேற்று சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் சட்டத்தின் எல்லைக்குள் செய்யப்பட்ட குற்றங்களை அடிப்படையாகக் கொண்டவை. எதுவும் நேரடி கொலை அல்ல. குற்றவாளிகளின் முட்டாள்தனம், கோழைத்தனம், பொறாமையால் நடந்தவை.
மேலும் நம் அனாமதேயர் தன் குட்டி சிப்பாய்கள் மூலம் நம் குற்றங்களை தண்டிக்க விரும்புகிறார்.
அந்த அனாமதேயன் ஒரு மனநோயாளி! ரோஜர் சொல்லியதுபோல் இங்கே நாம் மட்டும் தான் இருக்கிறோம் அடுத்த பலிக்காக அந்த ஓவன் எங்கோ மறைந்து இருக்கிறான். இந்த தீவு முழுவதும் சல்லடை போட்டு தேடவேண்டும்.


மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். இது ஒரு சிறிய பாறை தீவு. விரைவில் கண்டு பிடித்து விடலாம். எப்போது ஆரம்பிக்கலாம்?
நான் லெஸ்லியை நேசித்தேன். மனமார நேசித்தேன்.!
லெஸ்லி உங்கள் மனைவியா?
ஆமாம் அதனால்தான் ரிச்மாண்டை மரணத்திற்கு அனுப்பினேன். ஒருவகையில் பார்த்தால் இது கொலைதான் ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாது. பிறகு அவளும் இறந்தாள். நான் தனியானேன். எனக்கு கடற்கரைகள் பிடிக்கும். ஆனால் இங்கு வந்து இப்படி இறக்கப் போகிறேன் என்று நினைக்கவில்லை.
முடிவு உன்னை நெருங்கும்போது நீயும் மகிழ்ச்சி அடைவாய்.
பாரத்தை அகற்றி ஆசீர்வதிக்கப்படும் போது.... என் அன்பு லெஸ்லி....
உங்கள் பேச்சின் அர்த்தம் புரியவில்லை.?
யாரையாவது பார்த்தீர்களா.?
இன்னும் இல்லை..... வீண் முயற்சி. குகைகள் இல்லை. ஒளியவும் இடம் இல்லை. இது ஒரு தனிமைத்தீவு. மாளிகை மட்டுமே உள்ளது இங்கு நாம் மட்டுமே இருக்கிறோம்.
டாக்டர், நேற்று இரவு ரோஜரின் மனைவிக்கு தூக்க மருந்து கொடுத்தீர்கள். அதை அளவுக்கு அதிகமாக கொடுத்து விட்டீர்களோ? இருக்கலாம்.. சாத்தியம் உள்ளது. இது முதல் முறையும் இல்லை அந்த ரெக்கார்டில் சொல்லியபடி....
இங்கே பார் ப்ளோர், நாம் அனைவரும் அபாயத்தில் இருக்கிறோம். அதனால் ஒற்றுமை தேவை. நீங்கள் குற்றச்சாட்டுகளை தொடங்கும்முன் இந்த சாட்சி விபரங்களை உங்களிடம் கேட்கலாம்.
உன் கதை என்ன லொம்பார்ட்.? சுற்றுலா பயணியான நீ துப்பாக்கியை எடுத்து வந்த காரணம் என்ன?



பிரச்சனைகளை எதிர்பார்த்தேன். உங்களைப்போல் விருந்துக்கு வந்தவன் நான் இல்லை. மோரிஸ் என்பவர் பணம் கொடுத்து கண்காணிக்க வரவழைத்தார் இதையெல்லாம் பார்க்கும்போது ஓவன் என்னை தன் வலையில் வீழ்த்த உங்களுடன் தங்க வைக்க வைத்த பொறி தான் இது.
DING
மதிய உணவு சிறிது நேரத்தில் தயாராகி விடும். யாராவது ஜெனரலை பார்த்தீர்களா?
கடற்கரைக்குப் போய் இருக்கலாம். மணி ஓசை கேட்டு இருக்காது. நான் போய்....
பின்னர்....
ஜெனரல் மெக் ஆர்தர் இறந்துவிட்டார்.
எட்டு குட்டி சிப்பாய்கள் கடற்கரைக்குப் போனார்கள். ஒருவன் அங்கேயே தங்கிவிட, எஞ்சியவை 7.
மிஸ்... நான்... நான்... உங்களை பார்க்க வந்தேன்.....
18


ரோஜர்ஸ்! நீங்களே பாருங்கள்.. இப்போது ஏழு பொம்மைகள் தான் இருக்கின்றது?
அது மாரடைப்பு அல்ல. பலமான ஒரு பொருளால் ஜெனரல் பின்னந்தலையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.
ஜென்டில்மேன்! இன்று காலை இந்த தீவு முழுவதும் கொலைகாரனை தேடி பார்த்தீர்கள். ஓவன் என்ற பெயரில் நீதியை நிலைநாட்டுகிறேன் என்று நம்மை குறி வைக்கிறான் என்றும் சந்தேகமில்லாமல் உங்களுக்கு தெரிந்து விட்டது.
ஆனால் நான், ஆம்ஸ்டிராங் லொம்பார்ட் மூவரும் தீவு முழுவதும் தேடி விட்டோம். வேறு யாருமே இல்லை . யாருமே..
அப்படியானால் ஓவன் என்பவன் நம்மில் ஒருவன் என்பது கச்சிதமாக தெரிகிறது.
அடக்கடவுளே!!!
நேற்று தீவுக்கு வந்த பத்து நபர்களில் இப்போது மூவர் நிச்சயம் இல்லை.
நம்ப முடியாத விஷயம்! ஆனால் நீங்கள் சொல்வது சரியாக இருக்கும்.
லொம்பார்ட்டிடம் துப்பாக்கி இருக்கிறது. நேற்று இரவு அவன் உண்மையை சொல்ல வில்லை. அவனே ஒப்புக்கொண்டான்.
அதை நான் விளக்கி விட்டேன், எதிர்பாராத விதமாக நாம் அனைவரும் ஒரே பிரச்சனையில் சிக்கி உள்ளோம், ஒரே வார்த்தையில் சொல்வ தானால் நான் அந்த கொலைகாரன் இல்லை.
நானும் இல்லை. நான் ஒரு கௌரவமான டாக்டர்...!!
19.



நானும் புகழ் பெற்றவன் தான். அதை சொல்லி இப்போது ஒன்றும் இல்லை. டாக்டரும் ஜட்ஜும் கடந்த காலத்தில் செய்த கிறுக்குத் தனங்களை போலீஸ்காரன் செய்திருக்க மாட்டானா??
எது எப்படியோ... நீங்கள் பெண்களை இந்த சந்தேக வளையத்தில் இருந்து எடுத்து விடுவீர்கள் என்று நம்புகிறேன்.
ஏன்? பெண்கள் படுகொலைகள் செய்வது இல்லையா? இந்த மூன்று கொலைகளையும் ஒரு பெண்ணால் சாதாரணமாக செய்ய முடியும்.
உங்களுக்குப் பைத்தியம் என்று நினைக்கிறேன்.
மிஸ்! நாம் ஒருவருக்கொருவர் அன்னியர்கள். ஆதாரம் கிடைக்காதவரை சந்தேகம் அனைவர் மீதும் தான். மார்ஸ்டன் இறந்தபோது நாம் ஒன்றாக இருந்தோம். ஒருவர் திருமதி ரோஜர்சையோ ஜெனரலையோ கொன்றிருக்கலாம். கொலையாளி நம்மிடையே தான் இருக்கிறான்! நாம் செய்யவேண்டியது வெளி உலகுடன் தொடர்பு கொள்ள வேண்டியதே. அதுவரை ஒருவர் மேல் ஒருவர் சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கும். நம்மைச் சுற்றி அபாயம் இருக்கிறது.
நான் கொலைகாரன் இல்லை. நீயும் அப்படி ஒரு காரியம் செய்திருக்க மாட்டாய். ஆனால் இந்த கிழவன் வார்கிரேவ் தன்னை நீதிபதியாக நினைத்துக் கொண்டிருக்கிறான் உனக்கு யார். மேல் சந்தேகம்??
டாக்டர் ஆம்ஸ்டிராங்கின் மேல்.? இரண்டு மரணம் விஷமிடப்பட்டது. ஜெனரலின் உடலை கண்டதும் அவர்தான்.
நடந்த சம்பவங்கள் நம்பும் படியாக இருக்கிறது. பைத்தியத்துடன் பயணம் செய்தது போதும்.
நாம் எப்படியாவது தப்பிக்க வேண்டும்!
நம்மை காப்பாற்றச் சொல்லி எதிர் கரைக்கு செய்தி அனுப்பினாலும் இப்போது வீசும் பெரும் காற்றில் படகு வருவது சந்தேகமே! நம் அதிர்ஷ்டம் சூறைக்காற்று, புயலாகவும் மாறக்கூடும்?
அதற்குள் நாம் அனைவரும் கொல்லப்பட்டு இறந்து கிடப்போம்.
நான் அப்படி நினைக்கவில்லை. முதலில் கொல்லப்பட்ட மூவரைக் காட்டிலும் நாம் எச்சரிக்கையாக இருப்போம். அது மட்டுமல்ல, அந்தக் கொலைகாரன் யாரென்று தெரியவும் எனக்கு உன் உதவி தேவை.
COMICS PDF TIMES
20


ஒரு நிமிடம் நண்பர்களே! பாத்ரூமில் இருந்த திரைச்சீலை காணாமல் போனது யாருக்காவது தெரியுமா?
இது என்ன முட்டாள் தனம் ரோஜர்ஸ்.?
அதைக் காணோம்! கரும்சிவப்பு நிற நீர்புகாத் திரைச்சீலை.
என் ஸ்வெட்டர் பின்னும் நூல்கண்டையும் காணோம்.!?
அடக்கடவுளே? என்ன நடக்கிறது இங்கே? சுத்த பைத்தியக்காரத்தனம் ஒரு நூல்கண்டையும் திரைச்சீலையையும் வைத்து யாரையும் கொல்ல முடியாது எல்லாத்தையும் மறந்து தூங்கச் செல்லுங்கள்! இன்றைய பொழுது வாட்டி வதைக்கிறது.
எல்லோரும் கவனமாகக் கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள்.
கதவின் குறுக்கே ஒரு நாற்காலியையும் வையுங்கள்! இந்த கதவுகளை வெளியிலிருந்தும் திறக்கலாம்.
குட்நைட் ஜென்டில்மேன்! நாளை காலை நலமுடன் சந்திப்போம்!
இன்று இரவு குட்டி சிப்பாய்களை யாரும் தொட முடியாது.
21.


ரோஜர்ஸ் எங்கே?
ஏழு குட்டி சிப்பாய்கள் மரம் வெட்ட போனார்கள் ஒருவன் அவனையே வெட்டிக்கொள்ள மிஞ்சியவர் 6.
அடக்கடவுளே? அந்தப் பாடல்...? இந்தத் தீவில் தேனீக்களை வைத் திருப்பார்களா? அடுத்த வரி ஆறு குட்டி சிப்பாய்கள் தேன்கூட்டில் விளையாட... விசித்திரம் ? விசித்திரம்?
அமைதி! ஏற்கனவே நமக்கு நிறைய பிரச்சனை இருக்கிறது.
சாரி மிஸ் பிரெண்ட். நான் போய் காலை உணவு தயார் செய்கிறேன்.
கிழவி பிரெண்ட் தீவிர மதக்கோட்பாடு களுடைய பைத்தியம் போலிருக்கிறாள். அறையிலேயே அமர்ந்து பைபிளை படித்துக் கொண்டிருக்கிறாள்.
அது எதையும் நிரூபிக்காது ப்ளோர்! அதேசமயம் என்னை சந்திப்பதை நிறுத்தி விட்டாய் என்று தெரிகிறது. லேண்டர் வழக்கில் உங்களது ஆதாரங்கள் போலியானது. சரிதானே? என்னிடம் மறைக்க வேண்டாம். எப்படியும் இன்று இரவுக்குள் நாம் இறந்து விடுவோம்.
22.


உண்மைதான் லேண்டர் ஒரு நிரபராதி ஆனால் அவன் கூட்டாளிகள் அவன் சாகவேண்டும் என்று என்னை பிளாக் மெயில் செய்தனர். அவனை சிக்கவைத்து சிறையில் அடைப்பேன், அங்கேயே இறந்து விடுவான் என்று தெரியாது.
வெட்கப்பட வேண்டிய விஷயம்! முன்னரே தெரிந்திருந்தால் பலியாடாக இங்கே வந்து மாட்டியிருக்க மாட்டாய்.
நான் உன்னை காதலிக்கிறேன் வெரா. அது உனக்கு தெரியும். ஆனால் என்னிடம் பணம் இல்லை, சொத்துக்கள் சிரிலுக்கு சென்றடையும், அவன் நல்லவன். எனக்காக சொத்தை விட்டுக் கொடுத்தால்.... நானும் நீயும்.... அதுதான் வாழ்க்கை.
மிஸ் கிளேதோர்ன்! நான் அந்தப் பாறை வரை நீந்தட்டுமா, ப்ளீஸ்!
நல்லது சிரில்! நீ விரும்பியபடி அந்தப் பாறை வரை நீந்திச் செல்லலாம்.
வெரா, முட்டை அதிகமாக வறுபடுகிறது.
சாரி! வேறெங்கோ கவனம்.
23


அடுத்த அரை மணியில் நாம் ஒன்று கூடி, இனிச் செய்ய வேண்டியது பற்றிப் பேசலாம்.
அந்தக் கிழவி எமிலி பிரென்ட்தான் கொலைகாரி என்று நம்புகிறேன்! அவள் ஒரு கல்நெஞ்சகாரி. அவளது பணிப்பெண்ணை தற்கொலைக்கு தூண்டியது அவள்தான்.
அவள் இன்னும் சாப்பாட்டு அறையில் இருக்கிறாள். அவளை இங்கே கூப்பிடலாமே.
ஆறு குட்டி சிப்பாய்கள் தேன் கூட்டைக் கலைத்து விளையாட, ஒருவனை குண்டுத் தேனி கொட்டியது! எஞ்சியவர் 5.
அவளும் நிரபராதி! ஆனால் காலம் கடந்து விட்டது.
கழுத்தில் ஊசி போட்ட அடையாளம்! விஷ ஊசி போட்டு இருக்க வேண்டும்.


அதோ அந்த டேபிள் மேல் ஒரு குண்டுத் தேனி!
நம் அனாமதேயன் இப்பாடலை மிகவும் ரசிக்கிறான். விளையாடும் சாத்தான் அவன்.
இந்தத் தீவுக்கு ஊசியைக் கொண்டு வந்தது யார்?
நான் தான். ஒரு டாக்டராக என்னிடம் எப்போதும் ஒரு ஊசி இருக்கும்.
இப்போது அது எங்கே?
இங்கேதான் வைத் திருந்தேன். இப்போது காணவில்லை!!
இந்த அறையில் இப்போது ஐந்து பேர் இருக்கிறோம். நம் ஐவரில் ஒருவர்தான் கொலைகாரன்.
அவன் அனைத்தையும் ஆயுதமாக பயன்படுத்துகிறான். நாம் எல்லாவற்றையும் பூட்டி வைக்க வேண்டும். மருந்து, கத்தி, லொம்பார்ட் துப்பாக்கியையும் தான்.
முடியாது! என்னைக் காத்துக் கொள்ள நான் தயாராக இருக்க வேண்டும்.
நீங்கள் ஒரு பலசாலி. உங்களை எளிதாக எதனாலும் தாக்க முடியாது.
சரி, என் அறையில்தான் இருக்கிறது.
25.


துப்பாக்கி எங்கே என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த ஊசி எங்கு உள்ளது என்று தெரியும்.
சாப்பாட்டு அறை ஜன்னல் வழியாக வீசி இருக்கிறான். கூடவே ஒரு குட்டி சிப்பாய் பொம்மையுடன்.
நம் அனைவரின் பாதுகாப்புக்காக இனி நாமனைவரும் சேர்ந்தே இருக்க வேண்டும். மிகவும் அவசியம் என்றால் ஒருவர் மட்டும் சென்று வரலாம்.
முதலில் நான்! தலை வலிக்கிறது. ஒரு குளியல் போட வேண்டும்.
நான் அந்தப் பாறை வரை நீந்தட்டுமா மிஸ் கிளாதோர்ன்..?
ஓகே சிரில்! நீ விரும்பினால் அந்தப் பாறை வரை நீந்திப் போகலாம்.
கடல் காற்றின் வாசம்! யாரோ என் அறையில் இருக்கின்றனர்?
ஆஆவ்வ்வ்!!!
26.


என்ன ஆச்சு மிஸ்?
பயமாக இருக்கிறது. யாரோ இந்தக் கடல் செடியை இங்கே தொங்க விட்டுள்ளனர்.
ஜட்ஜ் எங்கே?
5 குட்டி சிப்பாய்கள் சட்டம் படிக்க போனார்கள்.
ஒருவன் புத்தக கிடங்கினுள் சிக்க, மிஞ்சியது நான்கு!
துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். கொன்றவன் நீதிபதி ஆடையை அணிவித்து இருக்கிறான்.
இதுதான் காணாமல்போன திரைச் சீலையும் பிரென்டின் நூல்கண்டுமா?
அந்தத் துப்பாக்கி எங்கே என்று தெரிய வேண்டும்!!
27


இல்லை அது என் தவறு இல்லை. ஹியூகோ வேண்டாம்.
யாரும் இல்லை. ஆனால் ஏதோ ஒரு சப்தம் நான் கேட்டேன்.
ஆம்ஸ்ட்ராங்... டாக்டர் ஆம்ஸ்ட்ராங்.?
TOC
TOC
TOC
ப்ளோர்.? என்ன நடக்கிறது அங்கே?
ஆர்ம்ஸ்ட்ராங் அவர் அறையில் இல்லை.
28


வெரா, உன் அறைக்குத் திரும்பி செல். நானோ அல்லது புளோரோ கூப்பிடாமல் கதவை திறக்காதே.
அப்படியே செய்கிறேன்.
காணாமல் போன என் துப்பாக்கி என் மேஜை டிராயரில் இருந்தது! வா போய் ஆம்ஸ்டிராங்கை தேடலாம்.
4 குட்டி சிப்பாய்கள் கடலில் விளையாட போனார்கள். சிவப்பு மீன் ஒருவனை விழுங்கிவிட மிஞ்சியது மூன்று.
அவன் இங்கே இல்லை. அதே சமயம் மூன்று சிப்பாய் பொம்மைகளே உள்ளது. அப்படியானால் ஆம்ஸ்ட்ராங்கும் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.
அப்படியானால் அவர் உடல் எங்கே?
கடலில் எறியப்பட்டிருக்க வேண்டும்.
யாரால்? உன்னாலா? அல்லது என்னாலா?
எது எப்படியோ? உன் துப்பாக்கியை திருப்பி வைத்தது யார்? அல்லது நீயே அதை வைத்து இருந்தாயா? அது அத்தனை நல்லதாகத் தோன்றவில்லையே?
முட்டாள்தனத்தை முதலில் நிறுத்துங்கள் . பாடலை மறந்து விட்டீர்களா? ஒரு சிவப்பு மீன்! இது ஒரு நல்ல தடயம். ஆம்ஸ்ட்ராங் இன்னும் தீவில் தான் இருக்கிறான் அவன் இறந்து விட்டதாக நாம் நினைக்க, குட்டி சிப்பாயையும் எடுத்துப் போயிருக்கிறான் அவன் காணாமல் போன காரணம், பாதையில் வந்த சிவப்பு மீன்...
29.



COMICS PDF TIMES


நம்மை எப்போதும் ஒருவர் கண்காணித்துக் கொண்டிருப்பதைப் போல உணர்வு உனக்கு தோன்றவில்லையா?
அது பயத்தினால்தான். நாம் ஒருவனை நினைத்து தான் பயப்பட வேண்டும். அது ப்ளோர். சாதுவாக தோற்றமளித்தாலும் மிகவும் தந்திரசாலி.
நான் உன்னை நம்புகிறேன்.
மிக்க மகிழ்ச்சி!
ஆனால் ப்ளோர் மீது வீண் சந்தேகம் என்று நினைக்கிறேன். என் எண்ணமெல்லாம் ஆம்ஸ்ட்ராங்கின் மேல்தான்.
உண்மையில் அந்தச் சிறுவனை மூழ்க விட்டுக் கொன்றாயா?
இல்லை! நான் இல்லை.
நீதான் செய்தாய். மேலும் இதில் ஒரு வாலிபனும் சம்பந்தப்பட்டு இருக்கிறான். உண்மையா?
உண்மைதான். ஹியூகோ இருந்தான்.
அலறல் சத்தம்!! அது உனக்கும் கேட்கிறதா?
AAAAAHH
மூன்று குட்டி சிப்பாய்கள் மிருகக்காட்சி சாலைக்கு போனார்கள்.
கரடி ஒருவனைக் கட்டியணைக்க, எஞ்சியவர் இருவர்.
31.



அடுத்தது நாம் தான்!
சந்தேகம் உறுதியாகிறது! ஆம்ஸ்டிராங் வீட்டினுள் மறைந் திருக்கிறான். நாம் கடற்கரைக்கு சென்றுவிடலாம். அங்கே இருந் தால் யார் வந்தாலும் தெரியும்.
கடற்கரையில் இருந்தும் குளிக்க முடியவில்லை.
என்ன அது? உடைகளைப் போல் தெரிகிறது.?
அது உடை அல்ல, ஒரு மனிதன்.
ஆனால்... யார் அது.?
32.


இது ஆம்ஸ்ட்ராங். இறந்து விட்டான் அதன் அர்த்தம்.?
அசையாதே! நகர்ந்தால் சுடுவேன்! இப்போது எனக்கு உண்மை புரிகிறது. இதுதான் முடிவு! உனக்கு புரிந்ததா இந்த விளையாட்டின் இறுதிக்கட்டம்..?
வேண்டாம்! துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிடு.
டுமீல்! டுமீல்! டுமீல்!
33



இரண்டு குட்டி சிப்பாய்கள் சூரிய ஒளியில் படுத்திருக்க, ஒருவன் மட்டும் உருகிப் போனான் .
மிஞ்சியவன் ஒருவன்.






உங்கள் காலம் கடந்து விட்டது என் குட்டி சிப்பாய்களே.
நீ மட்டும் என்னுடன் வரலாம். நாம் வென்று விட்டோம்! அவனால் நம்மை பிடிக்க முடியாது ஒரு சிப்பாய் தனித்திருக்க...... பிறகு எப்படி அந்தப்பாடல் முடிந்தது...? அதேதான் பிறகு ஓடிப்போய் தொங்கினான் தூக்கிலே. பிறகுஅங்கு ஒருவர் கூட இல்லை.
35.


நீ விரும்பிய தூரம் நீந்தலாம் சிரில்! நீ விரும்பினால் அந்தப் பாறையை தாண்டியும் நீந்தலாம்.
இதை உனக்காகவே செய்தேன் ஹியூகோ. ஆனால் அதை எனக்கு எதிராக ஏன் பயன்படுத்தினாய்.?
36.


CRASH
ஒரு சிப்பாய் மட்டும் தனித்திருக்க ஓடிப்போய் தொங்கினான் தூக்கிலே.
பிறகு அங்கு ஒருவர் கூட இல்லை!




இந்தக் கதையை நம்ப முடியவில்லை இன்ஸ்பெக்டர் மெய்ன்.
பத்துப்பேர் இறந்துள்ளனர் தீவில். உயிரோடு எவருமில்லை. கொஞ்சமும் அர்த்தம் இல்லையே?
இருந்தாலும் நடந்தது அதுதான் சர். தாமஸ்.
கொடூரமான முறையில் இறந்துள்ளனர் விஷமிட்டு, துப்பாக்கியால் சுட்டு, மண்டை உடைபட்டு, தூக்கிலிடப்பட்டு....
அவர்கள் அனைவரையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொலை செய்ததாக குற்றம் சாட்டிய கிராமபோன் ரிக்கார்டை கண்டுபிடித்தோம். நீதியை நிலைநாட்டும் வெறிபிடித்த U.N. ஓவனை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அவன் குற்ற வரலாற்றில் ஒரு குழப்பமான மனிதன் கொலையை செய்து காற்றில் மறையும் தந்திரத்தை செய்துள்ளான். ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு விளக்கம் இருக்க வேண்டும்.
பலியானவர்களின் குறிப்புகளில் இருந்து பார்க்கையில் U.N. ஓவன் சிப்பாய் தீவுக்குப் போக வில்லை என்று தெரிகிறது அப்படியே போயிருந்தாலும் துணை இல்லாமல் தப்பிக்க முடியாது. இதற்கு ஒரு விளக்கம் U.N. ஓவன் அந்தப் பத்து பேரில் ஒருவன்.
இந்த வழக்கை பல கோணங்களில் ஆராய்ந்து விட்டோம். பலியானவர்களின் குறிப்புகளிலிருந்து இறந்தவர் வரிசை முதலில் மார்ஸ்டன், திருமதி ரோஜர்ஸ், மெக் ஆர்தர், திரு ரோஜர், மிஸ் பிரெண்ட், வார்கிரேவ். ஜட்ஜின் மரணத் திற்குப்பின் வெரா கிளாதோர்னின் டைரியில் எழுதி உள்ளபடி ஆம்ஸ்ட்ராங் இரவில் வீட்டை விட்டு சென்றார் .அதன்பின் அவர் பின்னால் ப்ளோரும், லொம்பார்டும் சென்றனர்....
இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் நம்பக்கூடிய விளக்கம் ஒன்று தெரிகிறது. ஆம்ஸ்டிராங் மூழ்கி இறந்தான். நினைவிருக்கிறதா நான் நினைப்பது என்னவென்றால் 9 பேரையும் கொன்ற பிறகு அவன் ஏன் கடலில் விழுந்து தற்கொலை செய்திருக்க கூடாது அல்லது மறுகரைக்கு நீந்தும் வழியில் மூழ்கி இறந்து இருக்கலாம்.
39.


உங்கள் விளக்கம் இதில் அடிபட்டு போகிறது தடயவியல் நிபுணர் தீவை அடைந்தது ஆகஸ்ட் 13 காலை. அவரின் கணிப்பு படி அனைவரும் 36 மணி நேரத் திற்கு முன் இறந்திருக்க வேண்டும்.
அவரது ஆய்வின் படி ஆம்ஸ்ட்ராங்கின் உடல் 8 முதல் 10 மணி நேரம் தண்ணீரில் மூழ்கி இருந்துள்ளது. அதாவது அவர் பத்தாம் தேதி இரவு அல்லது பதினோராம் தேதி காலை மூழ்கி இருக்க வேண்டும். பலமாக வீசிய அலை அவர் உடலை 11ம் தேதி கரையில் காலை 11 மணிக்கு தள்ளியது. புயலுக்குப் பின் எழுந்த பெரிய அலையும் அதுதான்.
ஆம்ஸ்ட்ராங் கடலில் விழுந்து தற்கொலை செய்யும் முன் மற்ற மூவரையும் கொன்றி ருக்க முடியாது, ஏனென்றால் கடல் அலையில் அலைக்கழிக்கப்பட்ட அவர் உடல் கரையில் கிடந்தது. ஆனால் நேர்த் தியாக கிடத்தப்பட்டு இருந்தது! அப்படி யானால் ஆம்ஸ்ட்ராங் இறந்த பிறகும் தீவில் யாரோ உயிருடன் இருந்துள்ளனர்.
ஆம்ஸ்டிராங் காணாமல் போன 11ஆம் தேதி காலை மூவர் மீதி இருந்தனர் . லொம்பார்டு, ப்ளோர் மற்றும் வெரா கிளாதோர்ன். லொம்பார்ட் துப்பாக்கியால் சுடப்பட்டான் .அவன் உடல் ஆம்ஸ்ட்ராங்கின் உடல் அருகே கடலில் கிடந்தது. வெரா கிளாதோர்ன் தன் அறையில் தூக்கில் தொங்கியபடி கண்டுபிடி க்கப்பட்டாள். மாளிகையின் மாடியில் ப்ளோர் பளிங்கு கடிகாரத்தால் தலை நசுங்கி இறந்து கிடந்தார். ஒருவேளை அது மேலிருந்து அவர் தலையில் விழுந்து இருக்கக்கூடும்.
இப்போது வேறு கோணத்தில் வழக்கை பார்ப்போம். முதலில் லொம்பார்டு கடிகாரத்தை தள்ளி ப்ளோரை கொன்றிருக்க வேண்டும். வெராகிளாதோர்னுக்கு மயக்க மருந்து கொடுத்து தூக்கில் தொங்க விட்டிருக்க வேண்டும். கடைசியாக கடற்கரைக்குச் சென்ற அவன் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட் டுக்கொண்டு இறந்து இருக்கலாம். ஆனால் அவனிடம் இருந்து துப்பாக்கியை எடுத்தது யார்? அது வார்கிரேவின் அறையின் வெளியே கிடந்தது!
நீங்கள் நினைப்பது எனக்கு தெரியும் சார் . அந்த வெரா கிளாதோர்ன் லொம்பார்டை சுட்டு விட்டு பின் துப்பாக்கியை வீட்டுக்கு கொண்டு வருகிறாள், கடிகாரத்தை புளோரின் தலையில் போட்டுக் கொன்ற அவள் பின் தூக்கு மாட்டிக் கொள்கிறாள், அவள் அறையில் இருந்த நாற்காலியில் கடல் செடி ஒட்டி இருந்தது, அவள் ஷூவிலும் இருந்தது. அப்படியானால் அவள் நாற்காலியில் ஏறி தூக்கு மாட்டிய பின் அதை உதைத்து தள்ளிவிட்டு இருக்க வேண்டும்.
ஆனால் நாற்காலி கீழே விழுந்து கிடக்கவில்லை நன்றாக சுவரோரம் இருந்தது. மரணத்திற்குப் பின் ஒருவரால் எடுத்து வைக்கப்பட்டது போல் இருந்தது. இப்போது சந்தேகம் புளோரின் மேல். ஆனால் லொம்பார்டை சுட்டு விட்டு வெராவை மயக்கி தூக்கிலிட்ட பின் அவன் மேலேயே அந்த கடிகாரத்தை விழச்செய்து இருக்க முடியுமா என்று சொல்லுங்கள்? உங்கள் வாதத்தை நம்பமுடியவில்லை? ப்ளோர் போன்ற ஒரு மனிதன் தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பில்லை.!
அப்படியானால் அந்த தீவில் வேறு யாரோ இருந்திருக்க வேண்டும். இந்த கொடூர செயல்களை நேர்த்தியாகச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவன் எங்கே இருந்தான்? பிறகு எங்கே சென்றான்? மறுகரையில் இருக்கும் மக்கள் மீட்பு படகு அங்கே போகும் வரை யாரும் வெளியேறவில்லை என்று உறுதியாகச் சொல்கின்றனர்.
அப்படியானால் அவர்களைக் கொன்றது யார்?
COMICS PDF TIMES
40.



பல வருடங்கள் கழித்து...
எம்மா ஜேன் என்ற மீன்பிடிக் கப்பலின் கேப்டன்
கடலில் ஒரு பாட்டிலில் மிதந்து வந்த கடிதத்தை
கண்டெடுத்தார்.



எனக்கு அதீத கற்பனைகளில் அதிக ஈடுபாடு உண்டு. என் சிறுவயதில் சாகசக் கதைகள் படிக்கும் போது அதில் முக்கிய பத்திரங்களை கண்ணாடி பாட்டிலில் அடைத்து அலையின் போக்கில் வீசுவதை படித்து வியந்திருக்கிறேன். அதே வழியை பின்பற்றி சிப்பாய் தீவில் 10 பேரைக் கொன்ற என் பாவத்துக்கு மன்னிப்பாக, விடுவிக்க முடியாத புதிர் மற்றவர் கைகளுக்கு என்றாவது கிடைக்கட்டும் என்று செய்தேன்.
என் இளவயதில் என் சுபாவம் வெகுவாக முரண்பட்டு இருந்ததை உணர்ந்தேன் மரணத்தை காணும் போதோ அல்லது காரணமாக இருக்கும் போதோ மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் அதேசமயம் நீதி என்றும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.
ஒரு நீதிபதியாக என் முன் ஒரு மனிதன் நிரபராதியாக நிற்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. என்னால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்பதை நன்கு உறுதி செய்துகொண்டேன். முக்கியமாக எட்வர்டு செடானின் வழக்கு. அவன் வயதான கிழவியை கருணையின்றி கொன்றான் என்பது.
அப்போதுதான் நீதியின் பிடியிலிருந்து தப்புபவர்களை என் கையால் கொல்ல வேண்டும் என்ற திட்டம் உருவாகியது .பள்ளி குழந்தையின் பாடத்தில் வந்த பாடல் என்னை கவர்ந்தது. பத்து குட்டி சிப்பாய்கள்.
பலியாடுகளை தேடத் துவங்கினேன் . குடித்துவிட்டு அறுவை சிகிச்சை செய்ததால் ஒரு நோயாளியின் மரணத்திற்கு டாக்டர் ஆம்ஸ்டிராங் காரணம் என்று ஒரு நர்ஸ் மூலம் அறிந்தேன். ஓய்வு பெற்ற இரு இராணுவ அதிகாரிகள் பேசியதைக் கேட்ட போது ஜெனரல் மெக் ஆர்தரை பற்றி அறிந்தேன்.
பிறகு பிலிப் லொம்பார்டை பற்றி கேள்விப்பட்டேன் அதேபோல் ரோஜர்சின் நடவடிக்கைகளை பற்றியும். பிறகு எமிலி பிரென்டை இதில் சேர்த்தேன். கார் விபத்து புகழ் மார்ஸ்டனை இணைத்தேன். ப்ளோர் விஷயத்தில் லேண்டர் வழக்கைப் பற்றி முன்னரே தெரியும்.
இறுதியாக வெரா கிளாதோர்னை பற்றி ஹியூகோ ஹாமில்டன் என்னும் இளைஞன் சொல்ல அறிந்தேன் அவன் மருமகனை ஆழத்தில் நீண்ட அனுமதித்து மூழ்கி இறக்க காரணம் என்றான். இப்போது என்னிடம் 9 பலியாடுகள் உள்ளது ஆனால் பத்தாவதாக ஒரு பலிஆடு தேவைப்பட்டது.


அப்போது எனது டாக்டர் என் வாழ்நாள் இரண்டு மாதம் என்று நாள் குறித்தார். வாழும் நாளை வேதனையுடன் கழிக்காமல் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியதாக மாற்ற விரும்பினேன். பத்தாவது பலியாக என்னை நானே தேர்ந்தெடுத்தேன் ஓவன் என்ற கற்பனை பெயரில் சிப்பாய் தீவை விலைக்கு வாங்கி, நிதானமாகத் திட்டமிட்டு என் பலியாடுகளுக்கு வலை விரித்தேன்.
மார்ஸ்டனும் திருமதி ரோஜர்சும் முதலில் இறந்தனர். மார்ஸ்டனின் மது கோப்பையிலும், திருமதி ரோஜர்ஸ் குடித்த பிராந்தியிலும் சயனைடு இருந்தது. ஜெனரல் மெக்ஆர்தர் நான் பின்னால் வருவதை கவனிக்கவில்லை. வலியில்லாமல் இறந்தார்.
அன்று ஆகஸ்ட் 10ஆம் தேதி காலை விறகு வெட்டப் போன ரோஜரை கொன்றேன். அப்போது ஏற்பட்ட குழப்பத்தின் நடுவே லொம்பார்டின் அறையிலிருந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டேன். மதிய உணவுக்குப்பின் கிழவி பிரண்டுக்கு சயனைடு ஊசி போட்டு கொன்றேன். அங்கே ஒரு குண்டு தேனியை போட்டது சிறுபிள்ளை விளையாட்டாக இருக்கலாம். ஆனால் பாடலில் சொல்லியதை செய்து மகிழ்ந்தேன். துப்பாக்கியை பத்திரமாக மறைத்து விட்டு சயனைடு விஷத்தை முழுவதும் பயன்படுத்தினேன்.
என் திட்டத்திற்கு ஒரு கூட்டாளி தேவைப்பட்டது. டாக்டர் ஆம்ஸ்ட்ராங்.... கொலையாளியை பிடிக்க என் திட்டத்தை சொன்னேன். ஆம்ஸ்டிராங் அதை முழுமையாக ஒப்புக் கொண்டான். கொலைகாரனை பிடிக்க நான் இறந்தது போல் ஜோடனை செய்யலாம் என்று ஆர்ம்ஸ்டிராங்கிடம் சொன்னேன். அந்த யோசனை அவனுக்கு பிடித்தது.சிவப்பு நிற மண்ணை என் நெற்றியில் தடவி, பின் அந்த சிவப்பு நிற திரைச்சீலை, என் பழைய விக், குறைவான வெளிச்சம் இதுவே போதுமானதாக இருந்தது. எல்லாம் அழகாக நடந்தது.
டாக்டர் ஆம்ஸ்டிராங் தன் பங்கை சரியாக செய்தார். என்னை என் அறைக்கு கொண்டு சென்றவர்கள், பின் என்னைப்பற்றி மறந்துவிட்டனர். எனவே எனக்கு அவர்கள் படுக்கச் செல்லும்முன் லொம்பார்டின் துப்பாக்கியை அவன் அறையில் வைக்க வாய்ப்பு கிடைத்தது. அதிகாலை 2 மணிக்கு ஆம்ஸ்ட்ராங்கை கடற்கரைக்கு அருகே உள்ள பாறைக்கு சந்திக்க வரச் சொல்லி அங்கிருந்து அவனை தள்ளிவிட்டு கொன்றேன்.


பிறகு நான் எதிர்பார்த்த தருணம் வந்தது. பயந்துபோன மூவரும் தீவில் மிச்சம் இருந்தனர். ஜன்னல் வழியே அவர்களை நான் கண்காணித்துக் கொண்டிருந்தேன்.
தனியாக திரும்பிவந்த புளோரின் தலையில் ஜன்னல் வழியே கடிகாரத்தை வீசிக்கொன்றேன். வெரா, லொம்பார்டை துப்பாக்கியால் சுடுவதை பார்த்தேன். வெராவின் அறையில் சுருக்கை தயார்செய்து, உளவியல் ரீதியான விளைவுகளுக்கு காத்திருந்தேன்.
பயம்... அதிர்ச்சி... குற்ற உணர்ச்சி... அவளை தற்கொலைக்கு தள்ளியது. நான் நினைத்தது சரி.
இதோ இறுதிக்கட்டம்! நான்எழுதிய கதையை முடித்து, அதை ஒரு பாட்டிலில் போட்டு அடைத்து, அதை கடலில் வீசி எறிந்தேன். எதற்காக..? யாராலும் கண்டுபிடிக்க முடியாத கொலை மர்மத்தை விளக்குவதே என் ஆசை! எந்த ஒரு கலைஞனும் தன் திறமையுடன் திருப்தி அடைய முடியாது. அதற்கு தகுந்த பாராட்டு தேவை என்று எதிர்பார்ப்பான்.
இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதினாலும் சிப்பாய் தீவின் மர்மப் புதிர் இன்னமும் விடுவிக்க முடியாது என்றே நினைக்கிறேன். எட்வர்ட் செடான் குற்றவாளி என்றுதான் போலீசாருக்கு தெரியும். எனவே அதை கண்டு பிடிக்கலாம்.
இதில் உள்ள 10 நபர்களில் ஒருவர் கொலை செய்யப்படாமல் இருந்தால் இந்த அப்பாவி மனிதனை சட்டமே கொன்று விட்டது என்று நினைக்கக்கூடும்.
என் மரணம் என் விதி!
என் நெற்றியில் எழுதப்பட்டு விட்டது ஒரு கொலையாளியின் சாபம்.
44



இன்னும் கொஞ்சம் சொல்ல இருக்கிறது. என் கடிதத்தை பாட்டிலில் அடைத்து அலைகளில் வீசிய பின் நான் என் அறைக்கு வந்து படுக்கையில் படுத்துக்கொண்டேன்.
என் மூக்கு கண்ணாடியில் இருந்த எலாஸ்டிக் நூலை கதவின் கைப்பிடியில் கட்டினேன்.
மறுமுனையை எளிதில் அவிழும்படி துப்பாக்கியில் கட்டி ரேகை படியாமல் இருக்க கைக்குட்டையில் சுற்றிக் கொண்டேன்.
துப்பாக்கியின் விசையை அழுத்தியவுடன் என் கை தளர்ந்து என் பக்கமாக விழுந்தது.
BANG
துப்பாக்கியோ எலாஸ்டிக் விசையால் இழுக்கப்பட்டு கதவின் வெளியே தரையில் விழுந்தது.
45.




COMICS PDF TIMES

# அகதா க்றிஸ்டி

மர்மங்கள் நிறைந்ததாய் தெரிந்தோர்களால் அறியப்பட்ட சிப்பாய் தீவு! தொடர்பில்லாத 8 பேருக்கு செலவில்லாத சுற்றுலாவாக வரும் வரவேற்புக் கடிதம்!! எஜமான் யார் என்று அறியாமல் ஏற்கனவே அங்கு இருக்கும் இரண்டு பணியாட்கள்!! பத்து பேரும் கூடுகிறார்கள்... அங்கே இருக்கும் பத்து சிப்பாய் பொம்மைகளை கண்டு வியக்கிறார்கள்... அதன்பின்... மர்மமும் திகிலுமாய் சம்பவங்கள் நடக்கின்றன... கொடூரமான கொலைகளில் முடிகின்றன... சிப்பாய் பொம்மைகளும் எண்ணிக்கையில் குறைகின்றன... கடைசியில் உச்சக்கட்ட காட்சியும் நடக்கிறது... பிறகு அங்கே ஒருவரும் இல்லை... ஒவ்வொன்றாய் குறைந்த அந்த சிப்பாய் பொம்மைகளும் இல்லை ...இறுதியாக மர்மத்தின் முடிச்சுகள் இந்த படக்கதையில் அவிழ்க்கப் படுகின்றன... படித்து ரசிப்போமே...



# பிறகு அங்கே ஒருவர்கூட இல்லை!

(சிப்பாய்த் தீவு மர்மம்!!)

COMICS PDF TIMES